கொழும்பு தாமரை கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனி - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள், என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிகூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறைமை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புதத்கங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேறகொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமறற் தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப்பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது;

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு கம்பனியினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

  வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணக்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2021 நவம்பர் 16 திகதிய பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இல. 01/2021 இன் கீழ் வெளியிடப்பட்ட அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டு கையேட்டின் 6.7 ஆம் பிரிவு	நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியசாலைளில் உள்ள வருடாந்த சொத்துக்கள் சரிபார்க்கப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றாலும், இந்த அறிக்கை வெளியிடப்பட்ட திகதியில் அந்த அறிக்கைகள் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை.	நிலையான சொத்துக்களின் கணக்கீடு தற்போது நடைபெற்று வருகிறது, மேலும் களஞ்சியசாலைகள் குறித்த வருடாந்த கணக்கெடுப்பு 2025 திசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பு நடத்தப்படும்.	2021 நவம்பர் 16 திகதிய பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் கீழ் வெளியிடப்பட்ட அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டு கையேட்டின் 6.7 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	2022 சனவரி 14 ஆந் திகதிய PED 01/2015 (ii) ஆம் இலக்க பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை	(i)	உயர்மட்ட முகாமைத்துவ அதிகாரிகளுக்கு (HM1) வழங்க வேண்டிய எரிபொருள் கொடுப்பனவை மீறி 22 அதிகாரிகளுக்கு 2024 ஆம் ஆண்டில் ரூபா. 4,554,364 செலுத்தப்பட்டுள்ளது.	உயர்மட்ட முகாமைத்துவ அதிகாரிகள் வகையைச் சேராத முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் பதவிகளில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளின் தன்மை மற்றும் விடுமுறை நாட்களுக்கு அதிகமாக இரவில் பணிக்கு வர வேண்டியிருப்பதால், 2024 ஆம் ஆண்டில் முகாமையாளர்கள் மற்றும் உதவி முகாமையாளர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்பட்டது.	2023 மார்ச் 16 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய மற்றும் 2022 சனவரி 14 ஆந் திகதிய PED 01/2015 (ii) ஆம் இலக்க பொது நிறுவனங்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
		(ii)	உத்தியோகபூர்வ வாகனங்களுக்குத் தகுதியற்ற 21 அதிகாரிகளுக்கு 2024 ஆம் ஆண்டின் வாகனக் கொடுப்பனவாக ரூபா. 4,324,949 தொகை செலுத்தப்பட்டுள்ளது.	மேலே காணப்படும் பந்தியில் குறிப்பிடப்பட்ட காரணத்தினால் எரிபொருள் கொடுப்பனவு மற்றும் வாகனக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டது	2023 மார்ச் 16 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய மற்றும் 2022 சனவரி 14 ஆந் திகதிய PED 01/2015 (ii) ஆம் இலக்க பொது நிறுவனங்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2017 ஒக்டோபர் 25 ஆம் திகதிய நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் 05/2017 சுற்றறிக்கை		கம்பனியின் அனைத்து அதிகாரிகளினதும் சேவைக்காலம் 06 வருடங்களுக்கும் குறைவாக உள்ளதோடு மாதத்திற்கு செலுத்தக்கூடிய அதிகபட்ச தொழில்முறைக் கொடுப்பனவு ரூபா. 3,000 ஆக இருந்தபோதிலும், 2024 ஆம் ஆண்டில் கம்பனியின் 22 அதிகாரிகளுக்கு ரூபா. 3,315,416 அதிகமாக செலுத்தப்பட்டுள்ளது	மேலே உள்ள பந்தி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களால் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளில் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளின் வகைகள் மட்டுமே தீர்மானிக்கப்பட்டுள்ளன, மேலும் ஒவ்வொரு கொடுப்பனவுக்கும் செலுத்த வேண்டிய தொகை பணிப்பாளர்	2023 மார்ச் 16 ஆம் திகதிய பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் 05/2017 சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

			சபையினால் தீர்மானிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது, அதன் அடிப்படையில் தொழில்முறை கொடுப்பனவுகளுக்கு உரிமையுள்ள அதிகாரிகளுக்கு பொருத்தமான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.	
(ஈ)	2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டு கையேட்டின் 5.3 ஆம் இலக்க பந்தி	வரிக்குப் பின்னரான இலாபத்தில் குறைந்தபட்சம் 30 சதவீதத்தை பங்குலாபமாக திறைசேரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனினும், இது 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், மேற்கூறிய 30 சதவீத பங்குலாபத்துடன் மீதமுள்ள பங்குலாபத்தையும் திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டும், ஏனெனில் கம்பனியின் முழு மூலதனமும் திறைசேரிக்குச் சொந்தமானது, இது மேற்கொள்ளப்படவில்லை.	பதில் எதுவும் வழங்கப்படவில்லை	2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான செயல்பாட்டு கையேட்டின் 5.3 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 314,203,685 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 170,064,342 ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 144,139,343 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மொத்த வருமான அதிகரிப்பே பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2024 ஆம் ஆண்டிற்கான 2024 ஜனவரி 01 முதல் 2024 திசம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்கு தயாரிக்கப்பட்ட செயற்திட்டம் கணக்காய்வுக்கு	பதில் பொருத்தமற்றது	ஆண்டுக்கான செயல்திட்டம் தயாரிக்கப்பட்டு, திசம்பர் 31 ஆம் திகதிக்குள்

	சமர்ப்பிக்கப்படவில்லை, மேலும் 2024 ஆம் ஆண்டிற்கான செயல்முன்னேற்றத்தையும் சமர்ப்பிக்கத் தவறியதால் 2024 ஆம் ஆண்டிற்கான செயற்திறனை ஆராய முடியவில்லை.		செயற்திறன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஆ)	Aqua-Bay செயற்திட்டமானது அதன் நோக்கங்களை துல்லியமாக அடையாளம் காணாததால் பாதியிலேயே நிறுத்தப்பட்டது. மீளாய்வாண்டில் இந்த செயற்திட்டத்திற்காக ரூபா. 8,797,923 கொடுப்பனவுகள் அடையாளம் காணப்பட்டன, அவற்றில் ரூபா. 6,459,902 தொகை 03 செயற்திட்டங்களின் பணிகளுக்கு இறுதி கொடுப்பனவுகளாக செய்யப்பட்டன, மேலும் ஏற்கனவே ஏற்பட்ட செலவுகள் குறித்த செயற்திட்டத்தை செயல்படுத்தாததால் வீணடிக்கப்பட்டுள்ளது.	ஒரு சாத்தியக்கூற்று ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது, மேலும் இந்த செயல்முறையைத் தொடர்ந்து, “தியாத்ரா படகு“ சேவையை விரைவில் ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.	இச் செயற்திட்டத்தை விரைவாக செயற்படுத்த வேண்டும்.
(இ)	கம்பனியினால் இயக்கப்படும் credit card promotion க்காக வங்கிகளிடமிருந்து பெற வேண்டிய தொகைகள் ஏனைய பெறவேண்டியவைகளில் உள்ளடங்கும். 2024 திசம்பர் 31ஆம் திகதியன்று பெற வேண்டிய ரூபா. 991,299 தொகையானது 2025 மே 22ஆம் திகதிவரை பெறப்படவில்லை.	சர்ச்சைக்குரிய பணத்தை இம் மாத இறுதிக்குள் வசூலிக்க முடியும், அது வெற்றியளிக்காவிட்டால், கோரிக்கை கடிதம் வினியோகிக்கப்படும்.	வங்கிகளில் இருந்து பெற வேண்டிய பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2024 திசம்பர் 31ஆம் திகதியன்று கம்பனியின் 01 - 02 ஆண்டுகளுக்கு இடையிலான நிலுவைத் தொகையானது ரூபா. 2,445,475 ஆகவும், 02 ஆண்டுகளுக்கு மேலான நிலுவைத் தொகை ரூபா. 1,038,058 ஆகவும், அதாவது மொத்த நிலுவைத் தொகை ரூபா. 3,483,533ஆனது 2025 ஆகஸ்ட் 16 ஆம் திகதிவரை வசூலிக்கப்படவில்லை.	கம்பனியின் சட்ட அதிகாரி மூலம் கடிதங்கள் அனுப்பப்பட்டன, மேலும் தொடர்புடைய பணம் வாராக் கடனாக அடையாளம் காணப்படவில்லை, மேலும் தொடர்புடைய பணத்தை மீட்டெடுக்க மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	நிலுவையில் உள்ள நிலுவைகளை விரைவில் வசூலிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.2 பெறுகை முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	கொழும்பில் உள்ள தாமரைக் கோபுர வளாகம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளுக்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் அங்கிகாரம் பெறவேண்டியபோதிலும், அத்தகைய அங்கிகாரம் பெறப்படாமல், ரூபா. 35,194,969 செலவில் லி.ப்ட் கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	ஏற்றுக்கொள்ளப்பட்டது.	கொழும்பு தாமரை கோபுர வளாகத்தின் கட்டுமானம் மற்றும் மாற்றங்களுக்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் அங்கிகாரம் பெறப்பட வேண்டும்.
(ஆ)	Citrus Leisure தனியார் கம்பனிக்கான கணினி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான ஏல ஆவணங்களில், ஏலம் சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பொருட்கள் பெறப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தாலும், பொருட்கள் பற்றுச்சீட்டுகளின்படி 14 முதல் 83 நாட்கள் தாமதத்திற்குப் பிறகு கம்பனி பொருட்களைப் பெற்றது. மேலும், பெறுகைகள் வழிகாட்டுதல்களின் 7.1(ஆ) இன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏலதாரர்களுக்கு ஏற்றுக்கொள்ளும் கடிதம் வழங்கப்படவில்லை. பிரிவு 8.9.1 இன் படி இரு தரப்பினர்களுக்கும் இடையே ஒரு முறையான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கப்படவில்லை.	8.9.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி எந்தவொரு முறையான ஒப்பந்தமும் காணப்படவில்லை, மற்றும் தற்போது மேற்கொள்ளப்படும் பெறுகைகள் தொடர்பாக 8.9.1 பின்பற்றப்படும்	அரசாங்க பெறுகைகள் வழிகாட்டுதல்களின் பிரிவு 8.9.1 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	Citrus ஒப்பந்தம் மற்றும் அதன் செயல்திறனை ஆய்வு செய்தபோது, 2023 மே 31ஆம் திகதியன்று கம்பனிக்கும் Citrus Leisure பிரைவேட் லிமிடெட் கம்பனிக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பிரிவு 8.1 இன் பிரகாரமும், அதன் பிரிவு 8.2 இன் பிரகாரமும், மொத்த வருமானத்தில் 3.5 சதவீதம், மொத்த செயற்பாட்டு இலாபத்தில் 20 சதவீதம் மற்றும் மொத்த ஊழியர்களின் செலவுகளில் 10 சதவீதம் ஆகியவற்றை நிர்வாகக் கட்டணமாக செலுத்த ஒப்புக்கொள்ளப்பட்டது. ஒரு குறிப்பிட்ட ஆண்டில் மொத்த செயற்பாட்டு நட்டம் ஏற்படும் போது எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்த விதிகள் ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவில்லை என்பதும், ஒரு குறிப்பிட்ட ஆண்டில் நிகர நட்டம் ஏற்பட்டால், அதை கம்பனியே ஏற்க வேண்டும் என்பதும் கணக்காய்வின் மூலம் கண்டறியப்பட்டது.	அந்த ஒப்பந்தம் திருத்தப்பட்டு வருகிறது.	கொழும்பு தாமரை கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனிக்கு நன்மை பயக்கும் வகையில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.